# பௌத் தமும் சமூக உளவியலும்

**Pulenthiran Nesan**

## அறிமுகம்

கௌதம புத்தர் உலகின் முதலாவது உளவியல் சிகிச்சையாளராக அழைக்கப்பட்டார். அவர் தனிமையில் இருந்து தியானம் செய்வதனைவிட சமூகத்திற்குத் தேவையான போதனைகளை வழங்குவதில் தன்னுடைய அதிக நேரத்தைச் செலவழித்தார். பொதுவாக துறவிகள் காடுகள், மலைச்சாரல் போன்ற பகுதிகளில் தனிமையில் அமர்ந்து தியானத்தில் தமது நேரத்தினைச் செலவிடுவதாக அறிந்துள்ளோம். ஆனால் புத்தர் அவ்வாறில்லாமல் சமூகத்துடன் சேர்ந்து இருந்தார். இவ்வாறே பெருமளவான பௌத்தர்கள் (துறவிகள் மற்றும் சாதாரண மக்கள்) சமூகத்துடன் இணைந்து வாழ்ந்தனர். சமூக உளவியலும் ஓர் தனிமனிதனின் நடத்தைகளை அவன் சார்ந்த சமூக, சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு அறிவார்ந்த ஆராய்ச்சியை மேற்கொள்கின்ற ஒரு துறையாகக் காணப்படுகின்றது.

பௌத்த மதத்தின் சமூகச் செயற்பாடுகள் தொடர்பான அடிப்படைக் கொள்கையானது பின்வருமாறு உள்ளது. நாம் அனைவரும் ஒவ்வொருவரில் இன்னொருவர் சார்ந்துள்ளோம் என்பதையும் முழு உலகின் நல்வாழ்விற்கும் நாம் தவிர்க்க முடியாத பொறுப்பைக் கொண்டுள்ளோம் என்பதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. பௌத்தமதத்தில் சங்கம் என்பது எல்லா சாதியினருக்கும் பொதுவானதாகக் காணப்பட்டதுடன், மற்றவர்களுக்கு உதவுவதிலும் தீவிரமாகச் செயற்பட்டது. போதனைகளை ஆரம்பித்த முதல் வருடத்தில் 60 புத்த பிக்குகள் மட்டுமே காணப்பட்டனர். அவர்கள் நாட்டின் நன்மைக்காகவும், சமுதாயத்தின் நன்மைக்காகவும், மனிதர்களதும் கடவுளினதும் மகிழ்ச்சிக்காகவும் பல்வேறு வகையான செயற்பாடுகளை முன்னெடுத்தார். பௌத்த சமூகமானது எல்லா சமூகங்களுக்கும் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தது.

## ஆய்வுப் பிரச்சினை

புத்தர் துறவற வாழ்வில் அடிப்புடை வாழ்வியல் உண்மைகளை கண்டறிந்தமையால் சமூக உளவியல் கருத்தாக்கங்கள் எவ்வாறு பௌத்தத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது என்பது இவ் ஆய்வின் மையப் பிரச்சினையாகும்.

## இலக்கிய மீளாய்வு

டேவிட் களுபகான யு ர்ளைவழசல ழக டீரனனாளைவ ீாடைழளழிால என்ற நூலிலே பௌத்தத்தினை ஓர் மெய்யியல் நோக்கிலே பார்க்கின்றார். ஜயதுங்க என்பவர் தனது புயரவயஅய டீரனனாய வாந ருனைநரந ீளலஉாழவாநசயிளைவ என்ற நூலிலே புத்தரை ஓர் உளமருத்துவராகப் பார்க்கின்றார். சரச்சந்திர தனது டீரனனாளைவ ீளலஉாழடழபல ழக ீநசஉநிவழைெ என்ற நூலில் பௌத்த முக்கிய போதனைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இவ் ஆய்வானது பௌத்த சமூக உளவியற் பார்வையிலே புத்தருடைய போதனைகளை வெளிப்படுத்துவதோடு ஆய்வு இடைவெளியையும் நிரப்புவதாகக் காணப்படுகின்றது.

## ஆய்வு நோக்கம்

புத்தரது காலத்தினதும் பின்பு அவரது சீடர்களினாலும் முன்வைக்கப்பட்ட பௌத்த போதனைகளில் காணப்படும் சமூகத்தினை வளப்படுத்தும் உளவியல் அம்சங்களை வெளிப்படுத்துவதனைப் பிரதான நோக்கமாகக் கொண்டு காணப்படுகின்றது. இந்த ஆய்வானது புத்தரது மூல போதனைகளை பிரதான அடிப்படையாகக் கொண்டுள்ளது.

## ஆய்வு முறையியல்

இவ் ஆய்விற்கான தரவுகளானவை பிரதானமாக முன்னைய ஆய்வறிக்கைகள் நூல்கள் போன்ற இரண்டாம் நிலைச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டும் விபரணப் பகுப்பாய்வு முறையையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

## முடிவுரை ∴ கலந்துரையாடல்

சமூகத்தின் அடிப்படையாக விளங்குகின்ற உலகளாவியரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்க நடைமுறைகளை புத்தர் போதித்தார். முடிவுகள் சமத்துவத்துடனும் ஒருமித்த கருத்துடனும் எடுக்கப்பட வேண்டும் என தன்னுடைய சீடர்களுக்கு வலியுறுத்தினார். முடிவுகள் பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்டு அல்லது பரம்பரையான வழக்கங்கள் மூலம் அல்லது சமயரீதியான காரணிகளை முன்னிலைப்படுத்தி திணிக்கப்படல் கூடாது என சீடர்களுக்கு அறிவுரை வழங்கினார். பௌத்த சமுதாய சங்கங்களில் முடிவுகள் எடுப்பதில் தீவிரமான ஜனநாயக நடைமுறை பின்பற்றப்பட்டது. எந்தவொரு முடிவும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டால் மட்டுமே இறுதியான முடிவாகக் கொள்ளப்படும். இதன் காரணமாக புத்தர் தன்னுடைய சீடர்களுடன் இணைந்து புதிய சமுதாயத்தை உருவாக்கினார்.

## தொகுப்புரை

மனிதர்களிடையே காணப்படும் வேறுபாடுகளைக் களைந்து ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய துன்பங்களைப் புரிந்து அதிலிருந்து மீண்டுவர உதவுவதன் மூலம் ஓர் அமைதியான உலகத்தை உருவாக்க முடியும். இதற்குரிய உந்துதல் அனுபவங்களைக் கலந்துரையாடுவதன் மூலம் ஏற்படலாம் என்ற விடயம் இவ்

ஆய்வினூடாக வெளிப்படுகின்றது.

**Key words:** பௌத்தம்இ சமூக உளவியல்இ போதனைஇ துறவறம்இ மெய்யியல்

## References

David J. Kalupahana.; A History of Buddhist Philosophy; University of Hawai Press, Hawai; 1998.

Geshe Tashi Tsering.; Gordon Mc Dougall (Ed) Buddhist Psychology; the | Foundation of Buddhist Thought; 2016

Gordon Mcdongall.; Buddhist Psychology;Wisdom Publication, Bostom, USA;2006.

Jayatunge RM.;Gautama Buddha the Unique Psychotherapist; Colombo;2012.

Rhys Davids CA.; Buddhist Psychology: An Inquiry into the Analysis and Theory of Mind in Pali Literature; 2nd ed. London: Luzac and Co; 1924.

Rajapakse, R. P. C. R.;Buddhism and Counseling Aryabhimani- Baragama ariyabodhi nahimi abinandana shasthriya lipi; saraniya publishers, Colombo.

Sarachchandra, E.; Buddhist Psychology of Perception; Buddhist Cultural Centre, Dehiwala; 1994.

Suzuki DT, Jung CG.; An Introduction to Zen Buddhism Vol. 1991; NY: Grove Press; 1948.

Woodward, The Book of the Gradual Sayings Vol. II; : Pali Text Society Cambridge, U. K; 1995.